செ.வெ.எண்: 341 நாள்: 08-09-2021

## திருநெல்வேலி மாவட்டம்

### தொழுநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களது வீடுகளுக்கு தேடி சென்று தடுப்பூசி போடுவதற்கான வாகனத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வே.விஷ்ணு இ.ஆ.ப., அவர்கள் இன்று (08-09-2021) தொடங்கி வைத்தார்கள்.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், தொழுநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களது வீடுகளுக்கு தேடி சென்று கொரோனா தடுப்பூசி போடுவதற்காக வாகனத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வே.விஷ்ணு இ.ஆ.ப., அவர்கள் இன்று (08-09-2021) கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வே.விஷ்ணு இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

திருநெல்வேலி மாவட்டத்தில் 200க்கும் மேற்பட்ட தொழுநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களது வீடுகளுக்கு தேடி சென்று தடுப்பூசி போடுவதற்கான வாகனம் இன்று துவக்கி வைக்கப்பட்டது. இந்த வாகனத்தில் ஒரு மருத்துவர், இரண்டு செவிலியர்கள், ஒரு உதவியாளர், தொழுநோய் பிரிவு இரண்டு அலுவலர்கள் என ஆறு நபர்கள் இந்த வாகனத்தின் மூலம் மூன்று நாட்களுக்குள் அனைவருக்கும் கொரோனா தடுப்பூசி போடுவதற்கான பணிகள் மேற்கொள்வார்கள்.

மாவட்ட நிர்வாகத்தின் மூலம், கொரோனா தடுப்பூசி செலுத்துவதற்கான நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் குறைவாக தடுப்பூசி செலுத்தப்பட்ட பகுதிகளை கண்டறிந்து, அப்பகுதியில் நடமாடும் வாகனங்கள் மற்றும் சிறப்பு முகாம்கள் அமைத்து தடுப்பூசி செலுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் இதுவரை 4,90,800 நபர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இதில் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் இதர பணியாளர்கள் என 98 சதவீதம் நபர்களுக்கும், அங்கன்வாடியில் பணிபுரியும் 99 சதவீத பணியாளர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

தமிழக அரசின் உத்தரவின்படி 12.09.2021 அன்று மெகா தடுப்பூசி செலுத்தும் முகாம் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் 1 இலட்சம் நபர்களுக்கு தடுப்பூசி செலுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. போலியோ சொட்டு மருந்து முகாம் நடைபெற்றதை போல அனைத்து பகுதிகளிலும், அனைத்து இடங்களிலும் என 800க்கும் மேற்பட்ட தடுப்பூசி செலுத்துவதற்கான முகாம்கள் அமைப்பதற்கான நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த முகாமில் பொதுமக்கள் ஆர்வமுடன் வந்து தடுப்பூசி செலுத்தி கொள்ள வேண்டும். என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வே.விஷ்ணு இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ஆ.பெருமாள், மாவட்ட வருவாய் அலுவலர் (ஒழுங்கு நடவடிக்கைகள் ஆணையர்) திருமதி.எம்.சுகன்யா, துணை ஆட்சியர் (பயிற்சி) செல்வி. மகாலெட்சுமி, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.குழந்தைசாமி, துணை இயக்குநர் (தொழுநோய்) திருமதி. மரு.ஆஷா, மாவட்ட வழங்கல் அலுவலரின் நேர்முக உதவியாளர் திரு.கனகராஜ், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.எம்.எஸ்.மகாகிருஷ்ணன், மாவட்ட நல கல்வியாளர் மரு.பாலசுப்பிரமணியன், மருத்துவமனையின் மேற்பார்வையாளர் திரு.செல்லத்துரை சுகாதாரத்துறை ஆய்வாளர்கள். திரு. சிங்கராஜ், திரு.நாகராஜ் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டார்கள்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.**